




ஓலை 95| ஓசை 218| நவம்பர் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**பல்லார் முனியப் பயனில சொல்லுவான்**
**எல்லாரும் எள்ளப் படும்**

## பொருள்

**கேட்டவர் பலரும் வெறுக்கும் படியாகப் பயனில்லாத சொற்களைச் சொல்லுகின்றவன், எல்லாராலும் இகழப்படுவான்**


அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


**அகர முதல இலக்கியப் பேரவை**


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

**ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு!** **பா வகை : எண்சீர் மண்டிலம்**




அறையிருட்டை அகற்றிடவே இயலா சிம்னி
அகந்தையுடன் கதிரவனே நானு மென்று
குறைகூறி பழிப்பதாலே வெய்யோ னாகா;
குன்றின்மேல் இருந்தாலும் கதிரு மாகா;
நிலைவான செல்வங்கள் நிறைந்தி ருந்தால்,
நிலையான ஆக்கமாகா என்று ணர்வீர்!
நிறையான அறிவின்றேல் ஆக்க மெல்லாம்
நிலைக்காமல் அழிந்தேதான் போகு மன்றோ!

கார்முகிலைப் பார்த்தேதான் மழையைப் பெய்யக்
கயமையாலே வெண்முகிலும் புலம்ப லாமா?
சீர்மிகுந்த தண்ணொளியைப் பொழியு(ம்) அந்தத்
திங்களினைக் கண்டுவிடி வெள்ளி யுந்தான்
பேர்பெறவே அழுவதாலே ஆக்கங் கூடும்?
பெரிதுவக்கக் குறைகளைய முனைந்தி டாமல்;
நார்நாராய் உயர்ந்தோரை மதித்திடாமல்
நடந்தாலே நைந்துபோவர்; பொறாமை வேண்டா!




தகுதிகளை வளர்த்திடாமல் அகந்தை யாலே
தரந்தாழ்ந்து போவதாலே இழிவே மிஞ்சும்
பகுத்தறிவைப் பயன்படுத்தாப் பண்ணா டைகள்
பாடையிலே போனாலும் திருந்த மாட்டார்;
வகுத்துவைத்த நயன்மைவழிச் சென்றி டாமல்
வழிமாறி தீவினையால் பொறாமைக் கொண்டால்.
தகுந்ததொரு தண்டனையே வந்து சேரும்;
தனித்திகழ்தல் ஆக்கத்திற் கிழிவே யாகும்!

**இலக்கணக் குறிப்பு: எண்சீர் மண்டிலம்**

நான்கடிகள், எட்டு வரிகளாக வரும். நான்கடியும் ஒரெதுகை பெற்று வரும். அடி தோறும் முதல் சீரிலும் ஐந்தாம் சீரிலும் மோனை அமையும். காய் +காய்+மா+ தேமா ஆகிய சீர்கள் அரையடி தோறும் வரும். வரியென்பது அரையடி என்று கணக்கிட வேண்டும்.

# நல்லதை நினைத்திடு! நாளுமே உழைத்திடு!

பா வகை*: *கழிநெடிலடி ஆசிரிய மண்டிலம்; (*எண்சீர் மண்டிலம்*)
முதல் அரையடி விளம்+ விளம்+விளம்+விளம் வந்து,
அடுத்த அரையடியும் அவ்வாறே வரும்.)

வாழ்க்கையை வாழ்ந்திடு வளமுடன் நாளுமே
வருவதில் வழிகளை வகுத்அகதிடு நீயுமே
பாழ்படும் பற்றினை பற்றிடா திருந்திடு
பகலவன் பார்வையில் பளிங்கென ஒளிர்ந்திடு
தாழ்வுகள் தடைகளாய் தடுத்திட முனைந்திடும்
தடைகளைத் தகர்த்துநீ தகவுகொள் துணிந்துநீ
ஆழ்ந்திடும் அறிவினில் ஆற்றிடு செயல்களை
அழைக்குமே அளவிலா அகநிறை மகிழ்வினை

நல்லதை நினைத்திடு நாளுமே உழைத்திடு
நயமுடன் அறங்களை நல்விதம் தூவிடு
சொல்லினில் உண்மையும் தூய்மையை அடைந்திட
சுவைகளும் கூடுமே சுழன்றிடும் வாழ்விலே
வல்லமை அதுவென வழிமுறை சொல்லுமே
வலம்வரும் எண்ணமே வண்ணமாய் மாற்றிடு
புல்லராய் இன்றியே புத்துயிர் பெற்றிடு
புவியினில் நல்லதை புதைத்திடா விதைத்திடு

கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்

# ஹைக்கூ

மொட்டைமாடி வரும் குருவியினம்
அன்றாடம் பசியாற்றும் அப்பா
மகள் திருமணத்திற்குத் தாமதம்

வசந்தகால வைகறை
செடிசூழ் நெகிழியை அகற்ற
பூவில் அமரும் பட்டாம்பூச்சி



கவிஞர் ஸ்ரீனி. முத்துவேல், துபாய்

# உலகைப் படிப்பவன்

எப்போதும் எதிலும்
ஒழுங்கைக் கடைபிடிக்கும்
பக்கத்து வீட்டுக்காரருக்கு
காணும் எல்லாவற்றிலும்
நீளும் தாமதம்
காணச் சகிக்காமல்
தலைக்கேறும் கோபத்தில்
தானாகவே கிடைத்து விடுகிறது
சிடுமூஞ்சிப் பட்டம்
தேவையின் உச்சத்தில்
காலைப் பிடித்தும்
காயை நகர்த்தியும்
காரியம் சாதித்துவிடும்
எதிர் வீட்டுக்காரருக்கு
சாமர்த்தியசாலிப் பட்டம்
பொருந்திப் போகிறது.
எப்போதும் உதவியென
யார் கேட்டாலும்
ஓடிச்செய்யும்
மாடி வீட்டு நண்பருக்கு
எளிதில் கிடைக்கிறது
இளிச்சவாயன் பட்டம்
எப்படி வாழ்வதென்ற கேள்வியோடும்
எதைப் படிப்பதென்ற
ஏக்கத்தோடும்



எனைச் சுற்றியுள்ளோரைக் கண்டு
மனிதர்களின் மனிதத்தைப் பார்க்காமல்
பட்டங்களில் புறம் பேசும்
உலகத்தைப் பார்க்கையில்
வநதுவிடுகிறது பேரச்சம்.

கவிஞர் இளையவன் சிவா

# மாற்றம்

பிடித்தங்களிலும்
மாற்றம் உண்டு
காலத்துக்கு காலம்

இன்று
பிடித்துப்போனவர்கள்
நாளை இல்லாமலாகலாம்

நேற்றைய புன்னகையின்
முகங்கள் மங்கிப்போய்த் தெரியலாம்

நாளைய விருப்பங்களும்
நாளடைவில் நலிந்து போகலாம்

ஆயினும்
அது தொடர்பான துயரங்கள்
எப்போதும் இல்லாமலாகுமா ?

எக்கணத்திலேனும்
உன்னிதயத்திலிருந்து அகலுமா?




கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர்(இலங்கை)

# நட்பு

## அதிகாரம் : 79




பகையோர் வஞ்சமறுத்து
கொலையின் செயல்தடுத்து.
தோழமைகாக்கும் நட்புபோல்
அரியகாப்பு ஏதுமில்லை.

வளர்பிறையாய் வளரும்
அறிவுடையோர் நட்பாம்.
தேய்பிறையாய் குறைந்திடும்
அறிவில்லாதோர் நட்பாம்.

நூற்பொருள் கற்ககற்க
இன்பம் தருமாப்போல்.
நற்பண்புடையோர் நட்பு
பழகப்பழக இன்பந்தரும்.

நண்பரின் நெறிகேட்டை
இடித்துரைத்து நல்வழிப்படுத்தலே.
நறுமுகைபுரிதலினும் சிறப்பாம்
நட்புகொண்ட தோழமைக்கு.

முகங்கண்ட தொடர்பிலாதிடினும்
அகமொத்த உணர்ச்சிகளிருத்தலே.
இருநண்பர்க்கிடையே மெய்நட்பாவதற்கு
உரிய உரிமைதருமாம்.

முகமட்டிலும் சிரிக்கும்நட்பு
நட்பாகா உள்ளன்போடு.
அகமலர கொள்ளும்நட்பே
நட்பில் சிறந்தநட்பாம்.

தீங்கின் அழிவினின்று
விலக்கிக்காத்து நல்வழிப்படுத்தி.
தீயின்காலத்து அவனோடிருந்து
காத்தலே நல்நட்பாம்.

ஆடையவிழ்தலில் அதையேந்திக்
காக்குங்கைபோல் ஆன்றநட்பின்.
ஆபத்தின்கணத்தில் விரைந்தோடி
துன்பந்தீர்ப்பதே நல்நட்பாம்.

எக்கணமும் மனம்மாறாது
இயன்ற வகையிலெல்லாம்.
இணைந்து நின்றுகாக்கும்
இலக்கணமே நட்பிற்கழகாம்.

இவர் இத்தன்மையவர்
எவர் எத்தன்மையரென்று.
வரைமுறையில் எழும்நட்பு
தன்சிறப்பினை இழந்துபோம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# மணிமேகலை

## (முப்பத்தி இரண்டு)




மனிதனின் இயலாமையில் வருவது பிணி
மனதின் அழுக்கே நோய்க்குக் காரணம்
தினமும் புதிய ஆசைகள் பிறக்கின்றன
அனலில் இட்ட புழுவாக துடிக்கிறான்

"பேதமை மீளச், செய்கை மீளும்
செய்கை மீள, உணர்ச்சி மீளும்
உணர்ச்சி மீள, அருவுரு மீளும்
அருவுரு மீள, ஊறு மீளும்,
(அருவுரு : மாயை)
ஊறு மீள, நுகர்ச்சி மீளும் (வேதனை)
நுகர்ச்சி மீள, வேட்கை மீளும் (பேராசை)
வேட்கை மீள, பற்று மீளும் ,
பற்று மீளக், கருமத் தொகுதி (வினைப்பயன்)

மீளும், கருமத் தொகுதி மீளத்
தோற்றம் மீளும், தோற்றம் மீளப்
பிறப்பு மீளும், பிறப்புப் பிணிமூப்புச்
சாக்காடு, அவலம், அரற்றுக் கவலை"
ஆசைக்கு வாழ் நாள் கைதியாகிறான்

"பேதமை, செய்கை, அவாவே, பற்றுக்
கரும ஈட்டம் இவை காரணமாகும்
துன்பம் தோற்றம் பற்றே காரணம்
இன்பம் வீடே பற்றிலி காரணம்"

"வினா விடை நான்கு உள,
அவை முடிவாய் துணிந்து கூறல்
பலகூறு ஒவ்வொன்றாய் சொல்லுதல்
வினாவிற்கு எதிர் வினா கேட்டல்
வாய் பேசாமல் இருந்து விடல்"

நெறிகளில் மன மயக்கம் நீங்குக
அறச் சொற்கள் முரண் இல்லாதது
மனம் தெளிந்த தடாகமாக இருக்கனும்
தவத்திறம் பூண்டு நிம்மதியாக வாழ்க "

அறவண அடிகள் அருளுரை கேட்டாள்
தர்ம வாழ்க்கை தொடர்ந்தாள் மணிமேகலை .

மணிமகலை நிறைவு பெறுகிறது

அடுத்து ஆரம்பம் :
சீவக சிந்தாமணி...

கவிஞர் ந. திருக்காமு

# கடமை

## பாவகை - குறள் வெண்பா

1. தன்னல மின்றியே தன்மத்தை நாளும்
   தன்மையாய்ச் செய்தல் தவம்.

2. கடமையைச் செய்தே களிப்புடன் வாழ்தல்
   மடமை அகற்றும் மறம்.

3. பலனை எதிர்பார்த்த பரிவற்ற செய்கை
   நலனை அழிக்கும் நவை.



கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

# எட்டா தூரத்தில் நீ!

**கணவன்:**

நெஞ்சம் தீண்டும் இதழ் முத்தம்
கன்னம் தீண்டும் மெல்லிய வெட்கம்

சினம் குறைக்கும் செல்ல சீண்டல்
நேசம் சொல்லும் நெற்றி முத்தம்

செவ்விதழ் விரித்த மகிழம் மலரடி!
விண்மின் விழிகள் தேவதைப் புயலடி!

அன்பை கொடுப்பதில் அழகி யடிநீ!
காதலை யாசிக்கும் குழந்தை யடிநீ!

இரவின் மடியில் புன்னகைச் சிந்தி
இறுகிய அணைப்பில் எந்தன் மேனி
சிலிர்க்க வைக்கும் மோகினியடிநீ!

பேரழகி இல்லை தானடி இருந்தும்
உன்னுள் என்னை சுருட்டிக் கொள்ளத்
துடிக்கும் சாகசக் காரியடி நீயன்பே!

**மனைவி:**

கரங்கள் கோர்த்து விழிகள் நோக்கி
உந்தன் வியர்வை ருசித்திட ஆசை!

விடியும் பொழுது தினமும் உந்தன் அணைப்பினில்
நான்விழி திறக்க ஆசை!

விலகும் நேரம் இழுத்து அணைக்கும்
உந்தன் காதலில் கரைந்திட ஆசை!

பானை வயிறை தடவி கதைகள்
பலபேசும் இதழினை சுவைத்திட ஆசை!

சிலநேரம் குழந்தை போல சிணுங்கும் என்னை
கொஞ்சி அதட்டிட ஆசை!

பிரசவ வலியில் துடிக்கும் நேரம்
நெற்றி முத்தம் பெற்றிட ஆசை!

எட்டா தூரத்தில் நீயும் இருக்க
தெவிட்டா ஆசைகள் எனக்குள் நிறையுதே!



கவிஞர் தர்ஷினிசிம்பா

# நேசத்தின் ஆர்ப்பரிப்பில் நெஞ்சம் சிலிர்க்கிறதே

இளையவளே இனியவளே
இதயத்தில் நிறைந்தவளே

இளமைராகம் பாடியே
இனியகீதம் மீட்டியவளே

இசைவானேன் உன்னிடம்
இசைத்திட்டாய் என்னையே

இன்பமானது இதயம்
இருகரங்களால் அழைக்கையிலே

மலரினும் மென்மையே
மலர்ந்திட உண்மையே



மயங்கினேன் மங்கையே
சரணடைந்தேன் உன்னையே

பச்சைக் கிளியே
கோவை இதழாளே

கெஞ்சிடும் விழிகளே
கொஞ்சிடும் மொழிகளே

வண்ணங்கள் மிளிரும்
கன்னங்களின் எழிலே

நேசத்தின் ஆர்ப்பரிப்பில்
நெஞ்சம் சிலிர்க்கிறதே

உனதன்பில் வீழ்ந்தேன்
எனக்கானவள் நீதானே

எனக்குள் வாழ்பவளே
உள்ளத்தின் துடிப்பானவளே

ஆசையது துளிர்க்கிறதே
ஆனந்தத்தில் திளைக்கிறதே

காதல் தேவதையே
கனிவான காரிகையே

தழுவிடும் ஆரணங்கே
தளிருடல் தள்ளாடுதே

சங்கமிக்கும் தருணத்தில்
மகிழ்வாகுது மனமே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# யாத்திரை

நாளை என்தேரில்
வரப்போவது
நீயாகவுமிருக்கலாம்
ஆயத்தமாயிருந்து கொள்வது
உத்தமம்.
உனக்கான பயணத்தை
வேறெவர்க்காகவும்
என்னால்
பரிந்துரைச் செய்யலாகாது.
வரவேற்பாடுகள்
நீ எதிர்ப் பார்த்ததை விட
அதிவிமர்சையாகயிருந்தால்
அது உன்பேறு.
பெரியவர் சிறியவர்
ஆண் பெண்
நண்பன் எதிரியென்ற
பாகுபாடின்றி
மரியாதை நிமிர்த்தம்
கிடைக்கப் பெறலாம்.
இது இறுதி யாத்திரையென்று
பிறர் சொல்லக்கூடும்.
அது உண்மையே ஆயினும்
உன் அபிப்ராயங்கள்
ஏற்கப்படமாட்டது.



எல்லாமிழந்த
உயிரற்ற சடலத்தை
அப்போது பிணமென்று
சொல்லிக் கொண்டிருப்பார்கள்
எல்லோரும்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# விழித்தெழு மனிதா விடியலை நோக்கி



சின்ன நூற்கண்டா
உன்னைக் கட்டிப்போடுவது?

சிலந்தி வலைக்குள்ளே சிக்குண்டு
கிடக்கின்றாயோ?

விடியலை நோக்கி எழுந்திட
மறுக்கின்றாயோ?

முகாரி ராகம்
உன் முகவரியிலா?

சிறுத்தையை கதறடிக்கும்
உனக்கு கொசுபயமா?

நடந்தவை கனவாகட்டும்
நடப்பவை வெற்றியாகட்டும்.

கனவுகளை தீயிலிடு
தீமைகளை எரித்திடு.

உரிமைகளுக்காகவும்
உண்மைக்காகவும்
நேர்மையோடு போராடு.

தோல்விகளோடு துவளாமல்
வெற்றிக்கொடி கட்டு.

விழித்தெழு மனிதா!
விடியலை நோக்கியே!

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# வளவன் நல்லாட்சி

ஒறுத்தல் ஒவ்வாமை நீக்கி
ஓர்மை நல்கும் ஒப்பில்லா
மல்லன் மூதூர் .

கொண்டல் தீண்ட தென்றல் விலகும்
தெக்கண விசும்பு உதிர்க்கும் மழை
தென்புலம் புன்னகை செய்யும்.

வளமை வாசல் வந்தது
வறுமை புறம் சென்றது
வளவன் நல்லாட்சியில்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# மரணித்த காலம்

முற்கள் நிரம்பி வழிய
வாழ்வே சாவென துள்ள
என்ன செய்வேன்.

பித்தமேறிய காதல்
கண்ணீரை தந்து
சொல்லப்பட்ட வாக்குகளை
கொய்தெறிய துரோகங்களே
அடையாளமென்றாகிட

என்ன செய்வேன்
எல்லாம் மாயம்
வாழ்வே மரணம்
என்பது எந்த
விதத்தில் நியாயமோ தெரியவில்லை.

அல்லும் பகலும்
விடியும் பொழுதெல்லாம்
விழுதென இறையோனை கேட்டேன்.

எல்லாம் பொய்த்ததோ
இல்லை பொறுத்திருக்காது
பிழையேறி புரையேறியதோ.

இனியும் முடியாதென துடித்தேன்.
இதுவரையே போதுமென நினைத்தேன்.



இறைவா ஏற்று விடு
எனது பிரார்த்தனைகளையென கேட்டேன் .

பிரிவென முடிவானதும் மனதை கேட்டேன்
தப்பிக்க வழி வேறில்லையென உறைத்தது.

சட்டம் பேசுபவருக்கெல்லாம்
சன்னமாய் நெஞ்சிலேறும்
வலி தான் புரிந்திடுமோ.

விழிநீர் சொட்டும் வலி நீர் எங்குண்டு
அதில் தான் பெயருண்டோ

யார் அறிவாரோ
வாழ்வே ரணமெனயாகி போனால்.

கவிஞர் சஹீனாஸ் பேகம், இலங்கை

# அந்தாதிக் கவிதை

விடியல் தருகிறது ஆசை அனுபவம்
அனுபவம் தருகிறது இன்பம் துன்பம்
துன்பம் காட்டுகிறது நட்பு பகை
பகை காட்டுகிறது சூழ்ச்சி வஞ்சனை
வஞ்சனையால் வீழ்கிறது நன்மை நன்றி
நன்றியால் வருகிறது அடக்கம் அன்பு
அன்பால் நிறைகிறது நற்சொல் நற்செயல்
நற்செயல் வடிக்கிறது நமக்கான விடியல்.



கவிஞர் ஆதின் ஆரா, அருப்புக்கோட்டை

# நட்பு

நட்பு என்பது
இறைவன் கொடுக்கும் வரம் அல்ல
இறைவனுக்கே கிடைக்காத வரம்
எதிர்பாராத சந்திப்பில் தோன்றும் புன்னகை,
நினைவுப்படுத்தும் நட்பின் பசுமையை!
மலரின் வாசம் அனைவரையும் கவரும்!
அதுபோல நம் நட்பின் சுவாசம்
அனைவரையும் கவரட்டும்!



கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# இயல்பாய் வரும்

இகழ்வார் முன் ஏறு போல் நட.
வேண்டும் உரமான மனம்.
வேண்டும் தரமான அறம்.
ஏசு மொழியை தூசென தள்ளு.
கிண்டல் பேச்சை கிடையில் போடு.
கடுவன் என கடுப்பு காட்டாதே.
மடுவன் என்றும் மடங்கிடாதே.
கூர்மம் என்று சுருங்காதே.
அரவம் என்று நின்று ஆடாதே.
கூரன் எனக் கூர்மை கொள்.
குக்குடம் என கடமையில் நில்.
அங்கிங்கு நோக்காது,நேர் வழி தேர்.
ஏறு போல் நடை, உனக்கு;
இயல்பாய் வரும் காண்.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# சுகமான சுமைகள்

ஈரைந்து மாதங்கள்
கருவினில் சுமந்தே
தாய்மையின் வேதனைகளை
இனிதாய் ஏற்று
உதிரம் தனை உருக்கி பாலாக்கி
உணவாய் ஊட்டுகிறாள்.

நடப்பவை யாவும்
இறை நியதியெனவே
இன்பமும் துன்பமும்
வாழ்வில் வரவும் செலவுமென
வாழ்க்கை முழுதும்
தோளில் தன் சுமக்கிறாள்.



வலிகள் யாவும்
வாழ்வின் விதிகள் என
தியாகங்கள் பல புரிந்து
சுமைதாங்கியாய் சுமைகள் ஏற்று
புன்னகை வதனத்தோடு
புவியினில் வாழ்கிறாள்

பெண்ணாய்ப் பிறந்து
மனைவியாய் வாழ்ந்து
கணவனுக்கு சரி நிகராக
கைகோர்த்து சமபங்காய்
பொறுப்பகளை பொறுமையுடன்
தோளில் சுமக்கிறாள்

தாயாய் வாழ்தலில்
தாங்கும் சுமைகள் ஏற்றே
புகுந்த வீட்டில்
புதுமைகள் படைத்திட
பிறந்தகத்து சுதந்திரம்
மறந்தே சேவையாற்றுகிறாள்.

பொறுப்புக்கள் யாவுமேற்று
பொறுதியுடன் வேடங்கள் பல தாங்கி
வாழ்க்கை எனும் நாடக அரங்கின் இல்
அவள் பணிகள் ஏராளம்
ஆயினும் அவள் மனதில்
யாவும் இங்கு சுகமான சுமைகளே!

கவிஞர் செண்பகச் சோலையாள் ஆய்ஷ், கம்பளை

# கணவனுக்கு மனைவியின் கவிதை



அன்பே ஆருயிரே உனது இதயத்தில்
எனக்கொரு இடம் கொடுத்து தாங்கியவரே
கண்ணுக்கு கண்ணாய் நேசித்த உத்தமரே
அயராது வேலை செய்தாலும் ஞாபகம்
எல்லாம் என்னை சுற்றியே வந்தது
தொலைத்தூர பயணம் என்றாலும் மனதின்
ஓரத்தில் சஞ்சலமும் இருந்துக் கொண்டது
நாட்கள் நகர்ந்தாலும் உன்னைப் பார்க்க
துடிக்கும் ஒரே ஜீவன் நானே
பிழைப்புக்காக சென்று உடலை வருத்தி
வேலை செய்த நொடி என்
கண்ணில் ஆனந்த கண்ணீர் வந்தது
ஈருடல் ஒருயிராக இருந்த போதிலும்
நீ தொலைவில் வர நினைத்தாலும்
ஒரு நாட்களுக்கு பிறகு தான்
பார்க்க முடியும் அன்பே உன்
நினைவில் தவியாய் தவித்து நிற்கிறேன்

கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# அன்பு

இரண்டுநாள் பணிக்கு வராத
பணியாளரை
அவ்வளவு தீட்டியும்
சில மணி நேரத்திற்க்குப்
பின்பு
நேற்று வைத்த
புலனம் ஸ்டேட்டஸை
பார்த்ததில் இன்று
சொல்கிறார்
பிறந்தநாள் வாழ்த்துக்கள் என்று.



கவிஞர் இரா. மதிராஜ்

# ஏமாற்றம்

காதலில் ஏமாறுவது
ஆண்களா? பெண்களா?
காதல் சொன்னது
"இருவரும் அல்ல
காதலில் ஏமாறுவது
நான்தான்
அன்பை வைத்து
யாரையும் ஏமாற்றாதீர்கள்"



கவிஞர் ரா. ஜோதிமணி, தாராபுரம்

# இன்று

இன்றைய வாழ்க்கை என்பது
கானல் நீரின் நகலாய்

அவசர உலகில் மனிதம்
தெருவோர குப்பைகளாய்

சமையலறை எல்லாம் சுத்தமாய்
இணையத்தில் உணவு ஜீரணமாய்


பொழுதுகள் எல்லாம் அலைபேசி
தின்ற மிச்சங்களாய்

நடக்க மறந்த கால்கள்
மருத்துவமனையின் தேடல்களாய்

பணத்தை தேடும் பரபரப்பில்
வீடுகள் அநாதை இல்லங்களாய்

அடுக்குமாடி குடியிருப்பின் கதவுகள்
சுயநலத்தின் வர்ணங்களாய்

மனிதம் தின்ற மனிதனால்
நகரும் நாட்கள் நரகமாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# இதயம் தொட்ட உறவுகள்

வாசித்து முடிக்கும்
அனைத்து
பக்கங்களையும்
நாம் நினைவில்
கொள்வதில்லை
ஆனால்
இதயம் தொட்ட
சில வரிகளை
என்றும் மறப்பதில்லை
அதுபோல் தான்
சில உறவுகளும்



கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# நெற்றிக்கண்



காலம் தான் கெட்டது
கன்னியர் தம் வாழ்க்கை
போராட்டமாய்!
பாலியல் கொடுமை
சிறுமிகள் வன்புணர்வு
குழந்தைகளையும் விட்டு
வைக்கவில்லை!
மங்கையருக்கு வந்த
மாபெரும் சோதனை!
திரும்பும் திசையில்
எல்லாம் வேதனை!
வலிகள், கண்ணீர்
முடியவில்லை எம் ஈசனே!
இயற்கையாய் நீ
அளித்த ஆயுதமாம்
கூரிய நகங்களும்,
கூர்மையான பற்களும்,
போதவில்லை எம் ஈசனே!
அக்கினியைப் பார்வையில்
வைத்தும் அடங்கவில்லை!
ஆணவனின் ஆணவம்!
உயிரைக் கொடுத்தும்
தீரவில்லை இந்த சாபம்!

என்று விடியும் சுபவேளை!
அன்பைச் சுமக்கும் மனமும்
அருளைச் சுரக்கும் கண்களும்
பொறுமையும், கருணையும்
ஆண்களுக்குத் தெரியவில்லை!
அங்கம் மட்டுமே பார்க்கும்
ஆடவனை அழித்திட!
மங்கையர் தம் வாழ்வு
மலர்ந்திட!
கடனாகக் கொடு உன்
நெற்றிக்கண்ணை!
முப்புரம் எரித்த
முக்கண்ணனே!

கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# பஞ்சதன்

குறில் நெடிலுக்கான தூரத்தை பாருங்கள்
ஒட்டு வீடு
ஓட்டு வீடு

***

குடி
குடியை (குடிப்பதை)
வளர்க்கும்

***

மறக்க முடியாத மனிதர்கள்
கவிதைகள் போல

***

கிடைத்ததை பற்றிக்கொள் !
சாய்ந்த மின் கம்பத்தில்
பசலைக்கொடி.

***

விடிந்த பின்னும் எரியும்
தெருவிளக்கு இருக்கும் வரை
மின்வெட்டு குறையபோவதில்லை

***

கம்பி வைத்த சைக்கிளில்
காலை சுற்றி போட்டு ஓட்டும் போதே
நான் பெரியவன் ஆகிவிட்டேன்



தரை இறங்கும் விமானம்
இரை நெருங்கும் கழுகு போல

***

செங்கல்
சிற்பி
மேஸ்திரி

***

மாதா
பிதா
ஆண்ட்ராய்டு
தெய்வம்

***

கவனியுங்கள்
விலங்குகள் அனைத்திற்கும்
சுகப்பிரசவம் தான்

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

# மலர் வந்தது

மலரே!
எங்கிருந்து வந்தாய்
இருவிழியால்
இரு தடவை பார்த்தாய்
இருதயத்தை பதபதைக்க வைத்தாய்
இதயத்தை பறித்தாய்
இவன் போகும் பாதையை மறக்க வைத்தாய் - நீ
போகின்ற பாதையில் வர
மனதை வைத்த மலரே! மலரே!
நீ
எங்கிருந்து வருகின்றாயோ?



கவிஞர் தமிழ்வேதி முனைவர் க குமார், சித்தாலிக்குப்பம்

# மீண்டு வருவாயாக

விதை மண்ணுள் புதைந்ததோ
துளிர் ஒன்று கிளம்புமே
முகில் கதறி அழுததோ
மயில்கள் ஆட்டம் தொடங்குமே

கல் அடிகள் தாங்கியதோ
சிலை வடிவம் அடைந்ததே
வியர்வை துளிகள் சிந்தியதோ
படைப்பு ஒன்று பிறந்ததே



துயர் உன்னை வருடுதோ
அதனால் மனம் தளர்ந்ததோ
நீ உடைந்து போனாயோ
மீண்டும் எழுந்து வருவாயா?

கவிஞர் பொ. வளம், சிதம்பரம்

# முகப்பரு

உன் வீட்டு கண்ணாடிக்கும்
அழகான முகப்பரு
நீ அதை தினமும் அதிக நேரம்
உற்று பார்ப்பதால்



கவிஞர் இரா. சங்கர், ஈரோடு

# தடைக்கான விடை

ஏதோ ஒரு வகையில்
உங்களோடு தொடர்புடைய
யாரோ ஒருத்தரோடு
அன்போடு இருந்து கொள்ளுங்கள்.
அன்பினைப் பரிமாறிக்கொள்ளுங்கள்.
உங்களின் இனிமையான பொழுதுகள்
இடைவிடாது தொடர்வதில்
தடைகளும் வரலாம்.
விடைகளாக அன்பர்கள் இருப்பார்கள்.



கவிஞர் இரா. இராஜமோகன், அயன் குறிஞ்சிப்பாடி

# பஞ்சம்

பஞ்சமது ஆடையானால்
பாழுமுடல் தவிக்குமே
பஞ்சமது நீரானால்
பாழுமுடல் தவிக்குமே
பஞ்சமது உணவானால்
பாழுமுடல் தவிக்குமே
பஞ்சமது அன்பானால்
பாழுமுடல் தவிக்குமே



பஞ்சமது அறிவானால்
பாழுமுடல் துடிக்குமே
பஞ்சமது சுகமானால்
பாழுமுடல் துடிக்குமே
பஞ்சமது சுவாசமானால்
பாழுமுடல் துடிக்குமே
பஞ்சமது உணர்வானால்
பாழுமுடல் துடிக்குமே

பஞ்சமது பஞ்சமாகி
பஞ்சமின்றி போனால்
நெஞ்சமது சுகமேகி
நெஞ்சம் இனிதாகும்
துஞ்சுவது இனிதாகி
துஞ்சலும் வழக்காகும்
பஞ்சபூத உடலில்
பஞ்சபூதம் சமமாகும்

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# நினைவுகள் கொல்லுதே

பஞ்சணையும் உன்னால்
பரிதவித்துக் கிடக்க
நெஞ்சணையில் சுமந்திடவுன்னை
நேசங்கள் தேடுதே



சிந்தாத முத்தத்தால்
சிதையுது கன்னங்கள்
சொத்தான நானும்
செத்தாகிப் போனேன்

ஒலித்த குரலிசையும்
ஒலிக்காது போக
செவிப் பறையும்
செவிடாகிப் போனதே

உளியின்றிச் செதுக்கிய
உயிரான காதல்
வலிகண்டு இன்று
வறண்ட நிலமானதே

விழியில் தேக்கிய
விம்பமும் விஸ்பரூபமாய்
மொழியோடு தமிழாய்
உயிர்மெய் ஆகுதே

வேதனையில் வாடி
வேகுகின்றேன் உன்னால்
பூவாய்ப் புதைந்த
நினைவுகள் கொல்லுதே

கவிஞர் தமிழ்நதி கிருஷ் அபி

# பயணத்தின் நிறங்கள்



நம்பிக்கைகள் தோற்பதில்லை
நமதான உணர்வுகளில்.
நதிகள் ஓய்வதில்லை
நடனநங்கையாய் நயந்தே
நகர்கிறது.

நாட்களில் திரும்புதலில்லை
நாழிகைகள் நிற்பதுமில்லை
நன்றே கடமைசெய்
நறுமணமும் கமழும்.

தோல்விகள் தோள்கொடுக்கவே
துவண்டு வீழ்வதற்கல்ல.
தோழமைகள் உணர்வுகளுக்காகவே
நடுநிலை வகுத்துக்கொள்.

பயணத்தின் நிறங்கள்
வானவில் நினைவுகள்.
பார்க்கும் கண்களும்
பார்வையின் அகலங்களும்
பணிவாய்ச் செய்தி சொல்கிறது.
வீழ்வதும் எழுவதும்.
இறுதியில் மரணமுமே
யதார்த்தங்கள் என்பதை.

கவிஞர் சேஹூ மொஹம்மது பௌஸிரா, மதவாச்சி (இலங்கை)

# வளையோசை

தொடிவளை
தொடுத்ததிந்த இசை
பிடிவளை சிணுக்கலில்
பிடிவாதமேனோ

சங்கொத்த சிங்காரம்
சரந் தொடுத்த மாலைக்குள்
சிக்கும் வரை சிணுங்கி வை!



கவிஞர் ஜெயப்பிரபா

# யாருமற்றவர் யாருமில்லை



காலம் எனும் தேரில்
கடந்த வீதிகளில்
கலந்த எண்ணங்களை
கலப்படம் இல்லாமல்
அகத்துள் அழியாது

அசைந்த தேரிலே
ஆயிரம் ஓசைகள்
இசையும் கலந்தோடும்
இரைச்சலும் இணைந்து விடும்

பசியுமுண்டு பட்டினியுமுண்டு
ஈரத்துணியும் கசிந்துருகும்
ஒட்டாத உறவுகள் ஏப்பத்தில்
எக்காளமிடும்

ஒரு வாய் சோற்றிற்கு
ஓடாகத் தேயும் வேலையில்
அப்பனுமில்லை அன்னையுமில்லை
ஏற்பதிலும் இளகுவதிலும்
பொய்மை பூசிய சாதுர்யம்

இங்கு சொந்தங்கள் என்பதும்
சுயநலத்தை பூசியவண்ணமே
செருக்கும் மமதையும்
கூடி குலாவித் திரிகையில்
அன்பற்ற மனத்திடல்
ஆயிரம் பரிகாசத்தில்

யாருமற்றவர் யாருமில்லை
யாவரும் நம்மவரே
தழுவிடும் அன்பிலே அற்றவர்
என்பதேது

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# மனம் கொள்ளா மகிழ்ச்சி வேண்டும்

கல்லமில்லா உள்ளமும்
*கருணை* கொண்ட மனமும்  வேண்டும்.
 உயர்வான குணம் படைத்த
உண்மை *நண்பன்* வேண்டும்.

பொய்மை குணம்
*புதைகுழியில்* மடிய வேண்டும்.
பொய்யுரைத்து பொல்லாங்கு *புறம் பேசும் குணம்* படைத்த
மனிதர்களை புறந்தள்ள வேண்டும்.



*இனிய குணம்* இரக்க மனம்
வாழ்வில் நிலைக்க வேண்டும்.
*புன்னகை* மாறாத முகம்  வேண்டும்
உயிர்களிடத்தில் அன்பு மழை பொழிய வேண்டும்.

*வன்முறை அடிதடி* அண்டாதிருக்க வேண்டும்
அன்பு நட்பு உயிரென போற்ற  வேண்டும்.
அகிலமெங்கும் *அன்பு மழை* பொழிய வேண்டும்.
கொடுமை கண்டு விழியெல்லாம்  *தீ*  பரவ வேண்டும்.

அந்த கொடுந்தீயால் *கயமை எண்ணம்* ஒழித்து அழிக்க  வேண்டும்.
*துர்போதனை* சகவாசம் நாடாதிக்க வேண்டும்.
புவி எங்கும் *அமைதி* அன்பு நிலவ வேண்டும்.
*தமிழ் குரல்* உலகெங்கும் ஒலிக்க வேண்டும்

*மதம்* என்ற பெரும் பேயும் ஒழிய வேண்டும்.
*மனித குணம்* தெய்வ குணமாய் மாறும் நிலை வேண்டும்.
*போதை* என்னும் புதைகுழியில் வீழாத மனம் வேண்டும்.
*மனம் கொள்ளா மகிழ்ச்சி* என்றும் நிலைத்திருக்க வேண்டும்.

இதையெல்லாம் *தமிழ் தாய்* எனக்கருள வேண்டும்.

கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# தீர்த்தமலை

எண்ணில் அடங்கா ஆற்றல்களும், ரகசியங்களும்,
ஆன்மீகத்தின் அச்சாரமாகவும் விளங்குகிறது இம்மலை.
சோழர்கள் காலத்தில் கட்டப்பட்ட கோயிலும் மலைமேல் உள்ளது.
எக்காலமும் வற்றாத அருவி மலைமேல் விழுந்து கொண்டே இருக்கும்.
ராம தீர்த்தம், கௌரி தீர்த்தம், குமார தீர்த்தம், அக்னி தீர்த்தம்,
அகத்தியர் தீர்த்தம் இன்னும் பல தீர்த்தங்கள் உள்ளனவே!

மலையின் மேலே ராமர் லட்சுமணர் ஆஞ்சநேயர் ஆகியோர்
சிவபெருமானுக்கு பூஜை செய்ததாக ஒரு ஐதீகம்
இம்மலையை சுற்றிலும் பல தீர்த்தங்கள் உள்ளது.
அனுமன் தீர்த்தம், வருண தீர்த்தம், எம தீர்த்தம் மற்றும்
பல தீர்த்தங்கள் உள்ளது மலைக்கு மேலே வெள்ளி கிணறு
ஒன்றும் உள்ளது என்று சொல்லப்படுகிறது.
இம்மலை தீர்த்தங்கள் அத்தனையும் மூலிகை தீர்த்தங்களே!
தீராத வயிற்று வலியும், மற்றும் பல நோய்களை தீர்க்கும்
மருத்துவம் கொண்டுள்ளது. இம்மலை தருமபுரி மாவட்டத்தில்
அரூர் வட்டத்தில் உள்ளது இது ஒரு ஆன்மீக சிறப்பு வாய்ந்த மலையாகும்.



கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# நகர்வலம் போவாமா



நடுவானில் நிலவோடு
நகரும் முகலோடு
நட்சத்திர ஒளியோடு
நதிக்கரை தென்றலோடு
நஞ்சில்லா இயற்கையோடு
நந்தவன பூ வாசத்தோடு
நயனமாக நிசப்தத்தோடு
நரிகளின் ஊளையோடு
நல்லன்பு காதலோடு
நவிழ்ந்துடும் பேச்சோடு
நற்றுணையாக இருவருமே
நடுஇரவிலே கரம்கோர்த்தே
நமக்குள்ளே நெருக்கத்தோடே
நகர்வலம் போவாமா!

கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

பிரிந்தவர்களைக் காணத்
துடிக்கும் காத்திருப்பும்
சுகமான சுமைதான்!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி



அகன்ற அந்தத்தில்
அளப்பரிய அற்புதங்கள்

ஆழி பேரலையும்
அண்ணாந்து பார்க்கவும்

கடலோடு வானமும்
கலக்கின்ற முக்கூடல்

முத்தமாய் பொழியுமே
மெய்யுயிர் சிலிர்க்குமே

கவிஞர் ஏ. தேவராஜ், சென்னை

# இவன் வேண்டுவது

இவன் வேண்டுவது ஒன்றே
தனிமையில்
ஒரு அறை
ஒரு மேஜை
நிறைய நூல்கள்
காகிதக் கட்டுகள்
பேனாக்கள் இவைகள் போதும்
இவனது உலகம் பிரபஞ்சத்தையும்
தாண்டி விரிந்து விடும்.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

ஆண்டாள் 026

## நாச்சியார் 9வது திருமொழி "சிந்தூரச் செம்பொடியே"
## (திருமாலிருஞ் சோலையின் அழகர்தம் அனுபவமே 110-10 1-4-04)



தூதுபோகா மேகமது பொழிந்திட்டே மறைந்ததுவே!
எம்பெருமான் எம்பெருமான் திருமேனி நினைவூட்டும்
பூத்தமலர்! கோதைக்கு மெலிவினையும் நலிவினையும்
சேர்த்தனவே!பாழ்துன்பம் படுத்தியதே! இனிவாழல்
இயலுமோவென ஐயுறலே! தலைவரொடு கூடியுள
போதினிலே இன்பளிப்பது நிலாதென்றல் மலரென்போம்!
பிரிவினிலே துன்பமன்றோ? எம்பெருமான் கூடாநிலை
கோதைக்கு வாட்டிவதை சேர்த்ததுவே! வாழவியலா
நிலைசேர்க்கும் தன்மைதனை திருமொழிகள் ஒன்பதினிலும்
பத்தினிலும் உணர்த்துகின்றாள்!திருமாலிருஞ் சோலைவாழ்
அழகரான எம்பெருமான் அனுபவத்தை நாச்சியார்தாம்
காட்டுகின்றார்! முதல்பாசுரம் மலையையே மறைத்துவிட்ட
சிவந்தபூச்சி சிந்துரப்பொடி பரவியுள! அழகர்தாம்
விரித்தவலை தப்பிடுதல் இயல்வதுவோ?தேவர்கள்
அமுதுவேண்டி சரணடைய பாற்கடலில் மந்திரமலை
மத்தாக கடைந்தக்கால் இனிமையள் அமிழ்தொத்த
தகைமையள் பிராட்டிதோன்ற சுந்தரத்தோள் எம்பெருமான்
ஏற்றிட்டார்! அவன்விரிக்கும் வலைதப்பல் இயலுவதோ
என்கின்றாள்! இரண்டாவதில் எம்பெருமான் தோள்படர்ந்த
மாலையை தானாசை பட்டதனால் கோதையவள்
படும்பாட்டை யாரிடத்து முறையிடவோ எனுங்கலக்கம்
சாற்றுகிறாள்! வெண்மலர்கள் அழகர்தம் வெண்புன்னகை
நினைவூட்டும்! அன்னவனின் தோள்மாலை மனக்கிலேசம்
தந்ததுவே! மூன்றாவதில் எம்பெருமான் நிறமலர்களே!
அவன்செய்த செயல்நன்றோ என்றவினா விடுக்கின்றாள்!
பிழைக்கவழி உணர்த்திடவே வேண்டுகிறாள்! வளைவீழ
செய்செயல்தான் நன்றோவென கோதையவள் வினாவிடுப்பாள்!
நான்காவதில் பைம்பொழில்வாழ் பாடுகுயில் ஆடுமயில்
கருவிளைகள் களங்கனிகள் பூவைமலர் இவற்றினுக்கு
எம்பெருமான் நிறம்பற்றி யாதேயோ? மெலிவுநலிவு தனக்கன்றோ?

கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# எப்போதும் போல்

ஆங்காங்கே
முகங்கள்
பிரகாசமாய்



அலைபேசியின்
மாய உலகம்
அலங்கார விளக்குகளாய்
ஒளி உமிழ்ந்த படி

இரவு உணவிற்குப்பின்
எப்போதும் போல்
காத்திருக்கின்றன
வெறிச்சோடிய
நிலவும்
திண்ணைகளும்

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# இணைய மோசடியில் ஏமாறாதீர்!

இணையத்தின் பயன்பாட்டில் இவ்வுலகின் இயக்கம்!
இணையம் முடங்கினால் பலதுறைகள் முடக்கம்!
நன்மையும் தீமையும் இணைந்திருக்கும் இணையத்தில்
பன்முகத் திறமையுடன் பாதகர்கள் பலருண்டு!
வீட்டிலிருந்தே வேலையென வீசிடுவார் வலைதனையே!
ஈட்டிடலாம் வருவாயை கிரிப்டோ கரன்சி
பிட்காய்ன் வழியாகவென நம்பும்படி உரைத்திடுவர்!
கடவுச்சொல் பகிர்தலால் துடைத்தெடுப்பர் பணஇருப்பை!
குறைந்த விலையில் பொருட்களை விற்பதாய்
ஏராளமான விளம்பரங்கள் முகநூல், தொலைவரியில்!
பேராசை கொண்டு பணிப்பு செய்தால்
ஏமாற்றமே மிஞ்சும்! இழந்திடுவர் பணத்தினையே!
அங்கீகரிக்கப் படாத அணுகல்கள்!பிறிதொரு
நபரின் வலைத்தளத்தை கட்டாயமாகக் கைப்பற்றல்!
போலி மின்னஞ்சல் வயிலாக வலைவிரித்தல்!
போதைப் பொருட்களை அனுப்பியதாய் மிரட்டல்கள்!
விதவிதமாய் ஏமாற்றி சுருட்டுகிறார் சேமிப்பை!
நிதமும் செய்திகள் வெளிவந்த போதினிலும்
அதிகரிக்கும் மோசடிகள்! கவலைதரும் நிகழ்விதுவே!
இணைய மோசடிக் குற்றங்களைக் கையாள
தனிப்பிரிவு சிறப்பான செயல்பாட்டை அளித்திடுதே!
இனியேனும் பொதுமக்கள் விழிப்புணர்வு பெற்றால்தான்
இணைய மோசடியால் ஏமாறல் தவிர்த்திடலாம்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி, புதுச்சேரி

# அன்னையின் அன்பு

அதி புனித உறவாம் தாய்மையாம்
அன்னை இல்லையெனில் மனித இனமேயில்லையே
இறைவன் அளித்த பெரும் கொடையதாம்
உலகில் உன்னத உறவாம் தாயாம்
உணர்வின்றி மனிதனில்லை அது போன்றே
அற்புதத் தாயே நீயின்றி நானில்லை
நல்லெண்ணத்தை நம்முள் விதையாய் விதைத்து
தீயெண்ணத்தை அன்பால் முற்றாய் அளித்து
ஒளிவிளக்காய் நம் வாழ்வை மாற்றியவள்
தியாகத்தின் மறுஉருவம் பாசத்தின் அடையாளமவள்
பிறக்க முதலே முதற் காதலியானவள்
பிறந்ததும் நமக்கே அடிமையாய் வாழ்பவள்
தன்னுதிரத்தைப் பாலாக்கி வழங்கும் தியாகப்பெண்
ஆராரோ சொல்லி அழுகை அடக்கியவள்
நிலா நிலா பாடி உணவூட்டியவள்
நம் தவறையும் அன்பால் திருத்தியவள்
பஞ்சு மெத்தையில் கிடைக்காத சுகம்
கிடைத்திடுமே இனிதாய் தாய் மடியினில்
தன்னைப் பற்றி சிந்திக்க மறந்தவள்
இரவு பகல் நமக்காய் சிந்திப்பவள்
வயதானாலும் நமக்காய் என்றும் வாழ்பவள்
உலகில் விலையில்லா ஒன்று தாயன்பே
உலகிலே சுயநலமில்லா அன்பே தாயன்பு
வருடங்கள் கடக்க காயங்கள் ஆறிவிடலாம்
கற்பனைகள் திசை அறியாமல் மாறி போகலாம்
என்றும் மாறாத அன்பு தாயன்பே
உலகை ஆளும் என் இறைவனே
அதி அற்புத வரமொன்று வேண்டுமே
விண்ணுலக வாழ்விலும் தாய் மடியில்
தலை வைத்து தூங்கும் பாக்கியமே





கவிஞர் ரஸ்னா.ரமீஸான், அக்குறணை

# தாழாமல் மறவம் கொள்

பா வகை : கழிநெடிலடி ஆசிரியப் பதின்(பத்து) சீர் மண்டிலம்
(மா மா மா மா மா மா
மா மா மா மா )

தாழ்ந்தே போகா தோள்கள் கொண்டே தாங்கி நீயும்
தருமம் காப்பாய் தரையை வெல்வாய்;
வீழ்ந்தே போகும் நிலை வந்தே விதியும் உன்னை
வென்றா லுமேநீ நெஞ்சம் நிமிர்வாய்;
சூழ்ந்த இன்னல் கண்டே சோர்ந்தே போகா திடமாய்
சூழ்ச்சி வெல்ல மறவம் கொள்வாய்;
வாழும் காலம் கொஞ்சம் எனினும் வேந்தன் நீயே
வேங்கை போல வீரம் கொள்வாய்!



கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன் கோவை மாவட்டம்

ஆசிரியர் : "கவிமாமணி" இரஜகை நிலவன்
புத்தக வெளியீடு : மராத்திய மாநில தமிழ் எழுத்தாளர் மன்ற வெளியீடு



ஒரு நல்ல சிறுகதை என்பது ஒரு சுவைமிக்க மாம்பழத்தை இறுதிவரை விரும்பிச் சுவைப்பது போன்றதாகும். அவ்வாறு இன்றி, மாம்பழத்தை முதல் கடியிலேயே வீசியெறிந்து விட வேண்டும் என்ற எண்ணத்தை ஒரு சிறுகதை ஏற்படுத்தினால், அச்சிறுகதையினால் பயன் ஒன்றும் இல்லை என்பது தெரியவருகிறது.
ஒரு சிறுகதைக்குப் பின்னே உள்ள படைப்பாளரின் கலை ஆற்றல், கற்பனைத் திறன், சொல்லாட்சி, அவர் மறைமுகமாகக் கூறும் செய்தி - இவையனைத்தும் இலக்கண வரம்புகளை விட முக்கியமானவை.

வாழ்க்கையின் ஒரு சின்னஞ்சிறு காட்சியோ, மின்னல் போன்ற நிகழ்ச்சியோ, மெல்லிய அசைவோ, சூறாவளியின் சுழற்சியோ, நீர்க்குமிழியின் வட்டமோ, ஏதாவது ஒரு அணுவின் சலனமோ சிறுகதையாக இடமுண்டு.

சிறுகதைக்கு இலக்கணமோ, வரைமுறையோ, பண்போ கிடையாது என்று கூறுவோரும் உண்டு. ஆனால் சிறுகதைக்கு, பண்போ தனி இலக்கணமோ இல்லை என்று கூறிவிட முடியாது என்போரும் உண்டு. சிறுகதைக்கென இரண்டு நூற்றாண்டு காலப் புதிய மரபு தோன்றிவிட்டது

"இரஜகை நிலவன்"ஒரு நல்ல கவிஞர் என்று அறிவேன்,
இன்பம் பயந்து இனிமை சொரிந்து
துன்பம் விலக்கி தூய்மை வளர்த்து
அன்பைப் பெருக்கி அளவிற்பெருகி
இன்பமாய் எழுந்துள்ள.
இந்த* " அழகின் விடியல் ''புத்தகம் ஒரு சிறந்த படைப்பு.

தமிழ்மகள் வாசுகி, பத்திரிகையாளர், பெங்களூர்

# இன்னும் முளைக்காத காடு

வாசிப்பு அனுபவம் — ஹைக்கூ நூல்

நிழலி ; வெளியீடு : அகநி பதிப்பகம்
முதல் பதிப்பு 2024 ; பக்கம் 96; விலை ரூ 120




எண்ணத்தால் இளைப்பாறுதலுக்கு ஏற்றதொரு வாழ்வெனக் கொண்டாடும் மனதிற்கு காணும் இயற்கையெல்லாம் கவிதை எழுதித்தரும். இயற்கையை நேசிக்கத் தெரிந்த இதயத்தில் கருணைமழை பொழியும்.சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் சிறப்பான முறையான ஹைக்கூ வாசிக்கும் ஒவ்வோரு முறையும் புதுப்புது அர்த்தங்களை உணர்த்தி விடுகிறது.

பேராசையின் உச்சத்தில் உலகத்தெளயே தனது காலடிக்குள் வீழ்த்தி விட்டதாக கொக்கரிக்கும் மனிதன் தனது ஆறாம் அறிவைக் கொஞ்சமாவது பொதுநலத்தின் பக்கம் திருப்பியிருந்தால் நீருக்கும் காற்றுக்கும் புட்டிகளைத் தேடி அலைநதிருக்க வேண்டிய அவசியம் நேர்ந்திருக்காது.

வனமும் வனச்சூழலும் சிதைந்துவரும் அவலத்தை கண்முன்னே வாழவைக்கும் கடவுள் மரணித்து வருவதை உணரும் மனம் துடிக்கும் பேரோசையே இன்னும் பிறக்காத காடாக எழுந்து நிற்கிறது. முழுக்க முழுக்க இயற்கையைப் பிடித்துக் கொண்டு எதிர்காலம் சிறப்புற இயங்கத் தேவையான வழிமுறைகளை கண்டறிவதிலே தான் உலகம் முன்னிலைப் படுத்தப்படுகிறது.

இயற்கை நேசத்தை இழந்துவிட்ட காலத்தை, குடும்ப அமைப்பைத் துறந்துவிட்டு தனித்தீவுகளாக மாறிப்போன மனிதர்களை, அவசரத்தனத்தைப் பிடித்துக்கொண்ட வாழ்வுத்தனத்தை, மதுவின் ஊடுருவலை என சமூகத்தின் போக்கை காட்சிப்படுத்தும் வரிகளில் வெளிப்படும் பொதுநலத்தை இந்த முளைக்காத காடு விதைத்துச் செல்கிறது.

கவிஞர் இளையவன் சிவா

# இன்னும் முளைக்காத காடு

**வாசிப்பு அனுபவம்** **ஹைக்கூ நூல்**

பெருங்காட்டைப் பிரசவிக்கும் பேருயிரை ஒற்றைச் சங்கிலிக்குள் கட்டிவைத்து காண்போரை ரசிக்கவைக்கும் காட்சிப்பொருளாக மாற்றிவிட்ட மனிதர்களின் பேராசைக்குள் மாட்டிக் கொண்டிருக்கும் இயற்கையை விடுவிப்பது யார் பொறுப்பு?

"யானையின் லத்தியில்
உறங்கிக் கொண்டிருக்கிறது
இன்னும் முளைக்காத காடு "

மக்களின் அறியாமையை தனக்கான பண வரவாக எதிர்பார்க்கும் மனம் ஒருகணம் அதை உணரும்போது தனது செயல் மீதான வினாவை எதிர்கொள்ளவேண்டியிருக்கும். தனது எதிர்காலத்தையே கணிக்க முடியாதவன் பிறருடைய வாழ்வின் தலையெழுத்தை எப்படி மற்ற முடியும் என்பதையே இவ்வரிகள் குத்திக் காட்டுகின்றன.

"பத்து ரூபாய் கொடுத்தேன்
நல்ல காலம் பொறக்குது
குடுகுடுப்பைக்காரனுக்கு"

கொண்ட கொள்கையில் உறுதியாயிருக்கும் மனம் எப்போதும் புறச்சூழல்களைக் கண்டு மயங்கி விடக்கூடாது அப்படி மயங்கிப் போனால் தனது லட்சியம் ஈடேறாது போவதுடன் தனது வாழ்வும் முன்னேற்றத்தைக் காணாது தேங்கிவிடக் கூடும்.பொதுவான இந்தக் கவிதையை இன்றைய இலவச அரசியலுடனும் வாக்காளரைக் கவர்ந்திட அரசியல்வாதிகள் போடும் தூண்டில்களையும் பொருத்திப் பார்த்தால் காட்சி பிம்பமே மாறிப் போய்விடும்.

"ரம்பைதான் குளிக்கிறாள்
தவம் கலையவில்லை
குளக்கரை கொக்கிற்கு"

கவிஞர் இளையவன் சிவா

நாணம் பெண்மையோடு மட்டுமல்ல வளரும் உயிர்களோடு தொடர்புபடுத்திப் பார்த்தால் பணிவாகவும் எடுத்துக் கொள்ளத் தோன்றும்.

வளர்ந்து விட்டால் போதும்
வந்து விடுகிறது நாணம்
கவிழ்ந்து நிற்கும் நெற்கதிர்

அப்பாக்களின் லட்சியமே தனது உடல் உழைப்பும் தான் படும் துன்பமும் தனது பிள்ளைகளின் எதிர்காலத்தை சிறப்புற மாற்றிக் காட்டி அவர்களின் வாழ்வை முன்நகர்த்திடுதலே.பிள்ளைகளின் துன்பத்தை பொறுத்துக் கொள்ளவும் அப்பாக்களின் மனம் ஏற்றுக் கொள்வதில்லை.

கல் சுமக்கும் அப்பாவிற்கு
கனமாக இல்லை
புத்தகம் சுமக்கிறாள் மகள்

ஆசையைத் துறக்கச் சொன்ன புத்தனுக்கும் மதுவின் நெடி தாக்கப்படும் போது போதனைகளை என்ன செய்யமுடியும். இங்கே போதிமரங்கள் காத்திருக்கின்றன.நாமோ புத்தர்களையும் புதைகுழிக்குள் தள்ளிக் கொண்டிருக்கிறோம்.

"போதி தேடி
போகும் வழிமில் மதுக்கடை
தள்ளாடுகிறான் சித்தார்த்தன்"

ஏதேனுமொரு அச்சமோ தனது வாழ்வின் துன்பத்தை தன்னால் மாற்றமுடியாத போதோ கடவுளின் பெயரில் தீர்வைத்தேடி ஓடும் மனிதனுக்கு வேண்டுதலில் கிடைத்திடும் அமைதியும் தீரவும் வனத்தைப் பாதுகாத்திடும் யானையின் வாழ்வில் ஈடேறுமா என்பதை காலம் சொல்லட்டும்.

# இன்னும் முளைக்காத காடு

**வாசிப்பு அனுபவம்** **ஹைக்கூ நூல்**

ஓராயிரம் வேண்டுதல்
காடு திரும்ப முடியவில்லை
கோயில் யானை

பேராசையின் உச்சம் தனக்குத் தானே தீங்கைத் தேடிக்கொள்ளும். உயிர்களை வளர்க்கும் உணர்வுகளைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வரும் சூழலில்

கடைசித் துளிக்காக காத்திருந்தது
பால் கறக்கும் வரை
பசியோடு கன்று

என்பதை எண்ணிப் பார்க்கையில் கருணையும் அன்பும் காணாமல் போகின்ற நிலையை எப்படி மாற்றிக் கொள்வது?

காலத்தால் அழியாத எழுத்துகள் என்பது காலத்தை கண் முன்காட்டி மனிதர்களின் வாழ்க்கைப்பாட்டை உணர்த்த வைக்கும். சமூகத்தின் இருப்பு என்பது இயற்கையின் வளர்ச்சியில் அடங்கியுள்ள ஒரு கூறு என்பதை மனிதர்கள் புரிந்துகொள்ளவும் தமது செயல்களின் வழியே வாழ்ந்து காட்டவும் இதுபோன்ற வரிகளே வழியமைக்கின்றன.

இயற்கையைப் பாருங்கள் இயற்கையோடு இணைந்திருங்கள் இயற்கையைக் காத்திட முன்நகருங்கள் என்ற உணர்வை விதைத்திருக்கும் இன்னும் முளைக்காத காடு வாசிப்போர் மனங்களில் பசுமையை வளர்த்திடும் உயிர்நீராக மாறிவிடுகிறது.

கவிஞர் இளையவன் சிவா

# கட்டுரை

### பிறப்பு:

அனைவராலும் கவிக்கோ என்று அறியப்படும் அப்துல் ரகுமான் மஹி என்னும் சையத் அகமது ஜீனத் பேகம் இளையோருக்கு 1937 நவம்பர் 9 அன்று மதுரை கிழக்கு சந்தைப்பேட்டையில் பிறந்தார் இவருக்கு அருள்வண்ணன் என்ற புனைப்பெயரும் உண்டு.

### கல்வியும் பணியும்:



அப்துல் ரஹ்மான் தனது தொடக்கக் கல்வியும், உயர்நிலைப் பள்ளிக்கல்வியையும் மதுரையில் உள்ள பள்ளிகளில் பெற்றார். பின்னர் மதுரை தியாகராசர் அக்கல்லூரியில் சேர்ந்து இடைநிலை வகுப்பில் தேறினார். தொடர்ந்து கல்லூரியில் இளங்கலை முதுகலைப் பட்டங்களைப் பெற்றார்.

அப்பொழுது முனைவர் மா. இராசமாணிக்கனார், ஔவை துரைசாமி, பரந்தாமனார், ஔவை நடராசன்,பரமசிவானந்தம் அறிஞர்களிடம் தமிழ் பயின்றார்.

"உன் சாவில் சாம்பலை அல்ல
நெருப்பை விட்டுச்செல்" -கவிக்கோ

சென்னை தரமணியில் அமைந்துள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் அதன் இயக்குனராக பணியாற்றிய ச.வே .சுப்பிரமணியத்தை வழிகாட்டியாகக் கொண்டு புதுக்கவிதையில் குறியீடு என்னும் தலைப்பில் ஆய்வு செய்து சென்னை பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.

# கவிக்கோ அப்துல் ரகுமான்

## கட்டுரை


தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றதும் தியாகராசர் நடத்திய தமிழ்நாடு என்னும் நாளிதழில் மெய்ப்பு திருத்துனராக சில காலம் பணியாற்றினார்.

இஸ்லாமிய கல்லூரியில் பணியாற்ற அவருக்கு 1961 ஆம் ஆண்டில் வாய்ப்பு கிடைத்தது அங்கே சிற்றுரையாளர், விரியுரையாளர்,பேருரையாளர், பேராசிரியர் என படிப்படியாக உயர்ந்து, 1991 ஆம் ஆண்டில் விருப்ப ஆண்டில் விருப்ப ஓய்வு பெற்றார். அதில் 20 ஆண்டுகள் தமிழ் துறையின் தலைவராக பணியாற்றினார்.

தமிழ்நாடு வக்பு வாரிய தலைவராக 2009 மே முதல் 2011 வரை பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

**படைப்புகளும் விருதுகளும்:**

கவிஞர் அப்துல் ரகுமானின் கடந்த 1999-ஆம் ஆண்டு 'ஆலாபனை' கவிதை நூலுக்கு சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டது. மேலும் இவர் தமிழன்னை விருது, பாரதிதாசன் விருது, கலைமாமணி விருது, கம்பர் விருது, கலைஞர் விருது, சி.பா.ஆதித்தனார் இலக்கியப் பரிசு உள்பட பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.




பித்தன் என்ற நூலிலிருந்து:

"சட்டையை ஏன்
கிழிக்கிறாய்?" என்றேன்.
அதற்கு பித்தன் சொன்ன பதில்-
"கடிதத்தைப்
படிக்க வேண்டும் என்றால்
உறையைக்
கிழிக்கத்தானே வேண்டும்." -கவிக்கோ

குமரி. தர்மசீலன், இதழாசிரியர்

# கவிக்கோ அப்துல் ரகுமான்

## கட்டுரை

'பால்வீதி', 'நேயர் விருப்பம்', 'தேவகானம்', 'முத்தமிழின் முகவரி', 'விதைபோல் விழுந்தவர்', 'பாலை நிலா' உள்ளிட்ட கவிதை நூல்களையும், 'கரைகளே நதியாவதில்லை', 'அவளுக்கு நிலா என்று பெயர்', 'முட்டைவாசிகள்', 'தொலைபேசிக் கண்ணீர்', 'உறங்கும் அழகி', 'காக்கைச்சோறு', 'இது சிறகுகளின் நேரம்', 'எம்மொழி செம்மொழி' போன்ற பல்வேறு கட்டுரைகளையும் எழுதியுள்ளார். 'கம்பனில் அரசியல் கோட்பாடு' என்ற ஆய்வு நூலையும் படைத்துள்ளார். ஹைக்கூ, கஜல் உள்ளிட்ட பிறமொழி இலக்கியங்களை தமிழில் புனைந்திருக்கிறார்.



"கஸல்"

"இந்த பனித்துளிகள்
இரவு யாருக்காவோ
அழுதிருக்கின்றன
என்னைப் போலவே...!" -கவிக்கோ

### ஆலாபனை:

இழந்தவர்கள்' என்ற கவிதையில் 'குளிர் காய சுள்ளி பொறுக்கத் தொடங்கினாய், சுள்ளி பொறுக்குவதிலேயே உன் ஆயுள் செலவாகிக் கொண்டிருக்கிறது, நீ குளிர் காய்வதே இல்லை' என மனித வாழ்கையின் வெற்று ஓட்டத்தைப் பற்றி குறிப்பிடுகிறார். 'ஆறாத அறிவு' என்ற கவிதையில், அதன் தலைபிலேயே மனிதனின் ஆறாவது அறிவே அவனின் ரணம் என்பதை குறிப்பிட்டுவிடுகிறார்.

உயிரினங்களில் மனிதன் மட்டும்தான் கவலைப்படுகிறான். ஆறாவது அறிவு என்பது அவன் சுமக்கும் சிலுவையா? என வினவுகிறார். 'மானுடத்தின் திருவிழா' என்ற கவிதையில், மனிதன் பல்வேறு வரையரைகளால் கட்டப்பட்டிருப்பதாகக் கூறுகிரார். பக்கங்கள் கிழிந்து போன துப்பறியும் நவீனத்தைத் தெரியாமல் எடுத்துப் படித்திருக்கிறீர்களா? அதுதான் வாழ்க்கை என்கிறார். நதி நீரின்றி வறண்டு கிடந்தாலும் நதி என்றே அழைக்கப்படுவதை அறிந்திருக்கிறீர்களா? என்கிறார்

குமரி. தர்மசீலன், இதழாசிரியர்

## கட்டுரை

"பத்துபேர் பதினைந்துபேர் என்று கூடி அமர்ந்து கவியரங்கங்கள் நடத்திய நிலை மாறி என் தலைமையில் அப்துல் ரஹ்மான் போன்றவர்கள் கலந்து கொண்ட கவியரங்கங்கள் ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் நடக்கத் தொடங்கிய அந்த காலகட்டத்தை வரலாறுதான் கண்களை விரித்து பார்த்து கொண்டுதான் இருக்கிறது"

-மு.கருணாநிதி

அப்துல் ரகுமான் விட்டுச்சென்ற நெருப்பு சுண்டி போகாத
சூரிய நெருப்பு
அது சுவாசத்தில் எரியும்
அக்கினி காலத்தின்
மூலங்களை கடந்து
கொண்டே இருக்கும்...!

-வைரமுத்து

**இறப்பு:**

தனது 80- வயதில் சென்னையில் ஜூன் 20-2017 அன்று இறையடி சேர்ந்தார்.

"தமிழாய் பிறந்து
கவிதையால் வளர்ந்து
ஹைக்கூவாய் வாழ்ந்து
கஸலாய் மறைந்த "கவிக்கோவே"
நின் தாள்
போற்றுகின்றேன்...!"

-குமர.தர்மசீலன்

## நாளை நமதே

# வெற்றியை விட

# சில சமயங்களில்

# முயற்சிகள்

# மிகவும் அழகானவை

அகமும் தமிழே

முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com